**செய்தி வெளியீடு** **நாள் : 10.07.2025**

**சி.எம்.டி.ஏ. சார்பில் கே.கே. நகர், சிவன் பூங்காவை மேம்படுத்துதல், அசோக் நகர் பொது நூலகம், ஆழ்வார்பேட்டை, கவிஞர் பாரதிதாசன் சாலை வட்டார நூலகம் மற்றும் ராஜா அண்ணாமலைபுரம் பொது நூலகத்தை "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைத்தார்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (10.7.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** சி.எம்.டி.ஏ. சார்பில் **ரூ.31.97கோடி மதிப்பீட்டில்** விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கே.கே. நகர், சிவன் பூங்காவை மேம்படுத்துதல், தியாகராய நகர் சட்டமன்ற தொகுதி, அசோக் நகர் பொது நூலகம், மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி, ஆழ்வார்பேட்டை, கவிஞர் பாரதிதாசன் சாலை வட்டார நூலகம் மற்றும் சி.பி.ராமசாமி ஐயர் சாலை, ராஜா அண்ணாமலைபுரம் பொது நூலகத்தை **"முதல்வர் படைப்பகம்"** அமைப்பதற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தார்.

**விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, கே.கே. நகர், சிவன் பூங்காவை மேம்படுத்துதல்:**

இப்பூங்கா, 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் நடைபாதை, திறந்தவெளி அரங்கம், நீரூற்று குழந்தைகள் விளையாட்டு திடல், நுழைவாயில், யோகா மேடை, சறுக்கு வளையம், திறந்தவெளி உடற்பயிற்சி பகுதி, பூபந்து மைதானம் மற்றும் கழிவறை வசதிகளுடன் மேம்படுத்தப்படவுள்ளன.

**தியாகராய நகர் சட்டமன்ற தொகுதி, அசோக் நகர் பொது நூலகத்தை "முதல்வர் படைப்பகம்" மேம்படுத்துதல்**

இந்நூலகம், 24,963 சதுர அடி பரப்பளவில் ரூ.12.74 கோடி மதிப்பீட்டில் 15,118 சதுர அடியில் தரைதளம் + முதல் தளத்துடன் கூடிய **"முதல்வர் படைப்பகமாக"** மேம்படுத்தப்படவுள்ளன.

**ஆழ்வார்பேட்டை, கவிஞர் பாரதிதாசன் சாலை வட்டார நூலகம் "முதல்வர் படைப்பகம்" மேம்படுத்துதல்**

இந்நூலகம், 11,574 சதுர அடி பரப்பளவில் ரூ.12.55 கோடி மதிப்பீட்டில் 15,979 சதுர அடியில் தரைதளம் + 2 தளங்கள் கொண்ட **"முதல்வர் படைப்பகமாக"** மேம்படுத்தப்படவுள்ளன.

**சி.பி.ராமசாமி ஐயர் சாலை, ராஜா அண்ணாமலைபுரம் பொது நூலகம் "முதல்வர் படைப்பகம்" மேம்படுத்துதல்**

இந்நூலகம் 3,311 சதுர அடி பரப்பளவில் ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் 3,939 சதுர அடியில் தரைதளம் + முதல் தளத்துடன் **"முதல்வர் படைப்பகமாக"** மேம்படுத்தப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.த.வேலு, தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.கருணாநிதி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் திரு.கே.கண்ணன், செல்வி.நிலவரசி துரைராஜ், திருமதி.யாழினி, திரு.நந்தனம் மதி, திருமதி.சரஸ்வதி மோகன், தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர் திரு.பாலமுருகன், செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு, துணை இயக்குநர் (பொது நூலகம்) திருமதி.தனலஷ்மி, மாவட்ட நூலக அலுவலர் திரு.ராஜேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் திரு.முருகேசன், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Verified RealEstate ™